# சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு?

மூ. சிந்து
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கற்பகம் பல்கலைக்கழகம்,
ஈச்சநாரி

சங்க இலக்கியம் வாழ்க்கையைப் பண்படுத்தும் கருவியாகும்.இலக்கியம் பிரதிபலிப்பது மனிதனுடைய பண்பாட்டையும், பழக்கவழக்கங்களை மட்டுமா? என்று ஆழ்ந்து நோக்கும்போது இல்லை என்பது மட்டுமே பதிலாகப் பெற முடியும். பண்பாட்டையும் பழக்கவழக்கங்களையும் தாண்டி மனிதனுடைய உணர்வுகளையும் வெளிக்காட்டுகிறது என்பதை உறுதியாகக் கூறலாம்.

உள்ளத்து உணர்வுகளை உள்ளது உள்ளபடி எடுத்துரைப்பது இலக்கியத்தின் சாரம்சாரமாக அமைகிறது. மனிதனுடைய எண் வகை மெய்பாடுகளையும் வெளிப்படுத்தியும் அவற்றின் நிலையைக் கண் முன்னே கொண்டுவந்து உணரவைக்கும் கண்ணாடியாகவும் இலக்கியம் பிரதிபலிக்கிறது.

மனித வாழ்வில் அன்பும், வீரமும் அடிப்படையாக அமைய அன்பு கொண்ட வாழ்க்கையும், போர் நிறைந்த வாழ்க்கையும் சமமாக அமையப் பெற்றது என்பதே சாலச் சிறந்தது. தலைவனும் தலைவியும் அன்பு கொண்ட வாழ்க்கையில் ஒருவர் மீது ஒருவர் கொண்ட அன்பினை எடுத்தியம்புவதாக அக இலக்கியம்

அமைய அதற்கு இணையாகத் தலைவனின் கொடை வீரம் சிறப்பு ஆகியவற்றை வெளிப்படுத்துவதாகப் புறஇலக்கியம் திகழ்கிறது. அன்பு கொண்ட வாழ்க்கையில் தலைவன் தலைவியின் நிலையையும் இன்ப துன்பங்களையும், நிழலாடச் செய்வது சங்க இலக்கியமாகும்.

தலைவன் தலைவி இயற்கைப் புணர்ச்சியில் சந்திக்க எதிர்பாராது இருவருக்குமிடையே வருகின்ற காதலையும், மனவோட்டத்தையும் சங்க இலக்கியம் தெளிவாகப் பதிவு செய்கிறது.

தலைவன் தலைவியைக் காணும் நிலையை,

நின்மகள் உண்கண் பல்மாண் நோக்கிச்
சென்றோன்மன்ற,அக்குன்று குழவனோடு

என்ற அகநானூற்றுப் பாடலில் தலைவி தோழியோடு பூப்பறித்து விளையாடும் சோலையில், தலைவி பூவைப் பார்த்து புலி எனச் சத்தமிட புலியைக் கவன்று செல்ல வந்த தலைவனோ தலைவியின் மனதைக் கண் பார்வையால் கவன்று சென்றான் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

சிறுவயதில் சிற்றில் வீட்டில் சிதைத்த தலைவன் எதிர்பாராது சந்திக்க நேர்கிறது.

கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி,நகைக்கூட்டம்
செய்தான், அக்கள்வன் மகன்.

என்ற கலித்தொகைப் பாடலில்தலைவி தன் தாயோடு இல்லில் இருக்க வழிப் போக்கனாய் வந்த தலைவன் தன் தாகத்தைத் தீர்க்கும் பொருட்டு நீர் கேட்க தன் தாயின் கூற்றுக்கு இணங்கி உண்ணுநீர் கொடுக்க வந்த தலைவியின் வளைக்கையைப் பற்றி இழுத்த தலைவன், தன் அன்பு வேட்கையைத் தீர்த்துக் கொண்டமையை அறியலாகிறது.

தலைவன் தலைவியைக் காண வரும் வழியின் துயரை எண்ணித் தலைவி அடையும் துன்பமானது,

கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்த
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர் செகுக்கும்

என்ற குறுந்தொகைப் பாடலில். இரவு நேரத்தில் தலைவியைக் காணவரும் தலைவனுக்கு மலைப்பகுதியில் இருக்கும் விலங்குகளால் ஏதாவது தீங்கு உண்டாகுமாயின் தலைவியின் நிலையானது, கடுவனை இழந்த மந்தி தனது பறழை கிளையில் சேர்த்தி உயிர் விடுவது போல தலைவனைப் பிரிந்த தலைவியும் மந்திக்கு ஒப்ப உயிர்விடக் கூடும் என்ற நிலையில் தலைவியின் அன்பு தெளிவாகிறது.

தலைவி தலைவியின் அக வாழ்வில் ஒருவர் மீது ஒருவர் கொண்ட அன்பு என்பது அளவிடமுடியாத நிலையில் இருந்தமையைக் காணமுடிகிறது. தலைவி தலைவன் மீது கொண்ட காதல்அளவற்றது.

சிறுகோட்டுப் பெரும் பழம் தூங்கியாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிது

என்ற பாடலில் பக்கமலையில் உள்ள பலாமரத்தின் சிறிய கொம்பில்,பெரும் பழம் தொங்குவது போல தலைவியின் உயிரானது பலாமரத்தின் கொம்பினைப் போன்று சிறிது.ஆனால் தலைவி தலைவன் மீது கொண்ட அன்பானது பலாப்பழத்திற்கு ஒப்பானது என்பதை எடுத்தியம்புகிறது. சங்க இலக்கியம் அன்பு கலந்த வாழ்க்கையை எடுத்துக்கூறும் நிலையானது காலத்தைக் கடந்தும் இன்றும் கண்முன்னே காட்சிப்படுத்தும் காவியமாக விளங்குவதைச் சங்கப் பதிவுகள் தெளிவுபடுத்துகின்றன.